## ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை – 2017

-----------------------------------------------------------------------------------------------

ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

சபையின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------------------------

### 2.1 நிதிந் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வருடாந்த வரைவு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் வரைவு வருடாந்த அறிக்கையும் இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல்

-----------------------------------------------------------------------------------------

சபையின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய கணக்கேடுகளும் பதிவேடுகளும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமை

-----------------------------------------------------------------------------------------

சபையினால் கடைசியாகத் தயாரிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 2,231,172,049 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 686,456,256 |
| மொத்த சொத்துக்கள் | 2,917,628,305 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2,532,160,239 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 725,608,431 |
| மொத்த பொறுப்புக்கள் | 3,257,768,670 |
| தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை | (340,140,365) |
| | 2,917,628,305 |
| மொத்த வருமானம் | 571,588,867 |
| மொத்த செலவுகள் | (1,135,549,881) |
| பற்றாக்குறை | (563,961,014) |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் மற்றும் போக்கு வரத்துப் படிகளுக்கு தகைமையற்ற சபையின் MM சம்பளத் தொகுதியைச் சார்ந்த 07 உத்தியோகத்தர்களுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி பணிப்பாளர்களின் அங்கீகாரத்தின் அடிபப்டையில் மீளாய்வாண்டின் போது எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படியாக ரூபா 4,430,160 செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு தடவையின் போது ரூபா 100,000 உச்ச எல்லையின் கீழ் செயல்நிமித்த கட்டுநிதி பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் சபையின் பொதுப் பயன்பாட்டுப் பிரிவினால் உரிய எல்லையை மிகைத்து 16 சந்தர்ப்பங்களின் போது ரூபா 16,782,702 பணம் பதவி நிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை. | அனைத்து அரசாங்க ஊழியர்களதும் வருகை மற்றும் வெளிச் செல்லல் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் முகாமையாளர் (வளம்) பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அதன்படி வருகைளைப் பதிவு செய்திருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 செயலாற்றல்

-----------------------

#### 3.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற 15 தேயிலைத் தோட்டங்களின் மொத்த காணிப்பரப்பளவு 10,155 ஹெக்டெயர்களாக இருந்த போதிலும் அவற்றில் 2936 ஹெக்டெயர் பரப்பளவான காணிகளில் மாத்திரம் தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. அதற்கிணங்க மொத்த காணி பரப்பளவில் 7219 ஹெக்டெயர்களான 71 சதவீதமான காணிகள் சபையினால் தேயிலை பயிரிடல் அல்லது ஏனைய இடைப் பயிர்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திக் கிரயம் (COP), சராசரி விற்பனைப் பெறுமதி (NSA), ஒரு அலகின் பங்களிப்பு என்பன தொடர்பாக ஒப்பீடு செய்த போது சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற 15 தோட்டங்களின் பூர்த்தியான தேயிலையின் ஒரு கிலோ கிராமிற்கான பங்களிப்பு மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது ரூபா 100 இலிருந்து ரூபா 594 வரையான வீச்சில் காணப்பட்டது. அதற்கிணங்க சபையின் ஒரு உற்பத்தி அலகின் விற்பனை வருமானத்திலிருந்து அதன் கிரயத்தை உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது.

(இ) சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற கலபொட ரஹதுன்கொட, ரொக்வூட் ஆகிய தோட்டங்களில் ஒரு கிலோகிராம் பூர்த்தியான தேயிலையின் மறைப் பங்களிப்பை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டளவில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கிணங்க சபையின் தோட்டங்களில் தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக இரசாயனப் பசளை மற்றும் களை கொல்லிகள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தாமை தேயிலைக் கொழுந்துகளின் உற்பத்தி குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது.

(ஈ) தோட்ட கைத்தொழில் அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது தேயிலைக் கைத்தொழிலுக்காக வழங்கப்பட்டுள்ள புள்ளிவிபரத் தரவுகளின் பிரகாரம் ஒரு ஹெக்டெயருக்கான வருடாந்த சராசரி பூர்த்தியான தேயிலை விளைச்சல் 1594 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் சபையின் 15 தோட்டங்களில் ஒரு ஹெக்டெயருக்கான வருடாந்த சராசரி பூர்த்தியான தேயிலை விளைச்சல் 317 கிலோ கிராம்களுக்கும் 719 கிலோ கிராம்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது . இதற்காக சபைக்குச் சொந்தமான தோட்டங்களில் ஒரு ஹெக்டெயரில் காணப்பட்ட தேயிலை நாற்றுக்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையும் புதிய பயிர்ச்செய்பை ஆரம்பிக்கப்படாமையும் காரணமாக இருந்தது.

(உ) 2015 அம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற தேயிலைத் தோட்டங்களுக்காகத் தேவைப்படுகின்ற இரசாயனப் பசளைகள் ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக 15 தேயிலைத் தோட்டங்களில் 14 தோட்டங்களின் தேயிலை கொழுந்து உற்பத்தி குறைவடைந்தமை 05 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது லெவலன் தோட்டத்தின் முதிர்ச்சியடைந்த தேயிலைப் பயிர்செய்கை காணிகளின் அளவு 10 ஹெக்டெயர்களால் அதிகரிததிருந்தும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு ஹெக்டெயருக்கான வருடாந்த சராசரி பூர்த்தியான தேயிலை விளைச்சல் 435 கிலோகிராம்களிலிருந்து 430 கிலோகிராம் வரை குறைவடைந்திருந்தது.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான 15 தேயிலைத் தோட்டங்களில் லெவலன், மஹவில ஆகிய இரண்டு தோட்டங்களைத் தவிர்த்து எஞ்சிய 13 தோட்டங்களில் காணப்பட்ட 3672 ஹெக்டெயர் முதிர்ச்சியடைந்த தேயிலை பயிர்ச்செய்கை காணிகளில் ஒரு ஹெக்டெயருக்கான வருடாந்த சராசரி பூர்த்தியான தேயிலை விளைச்சல் 300 கிலோகிராம்களுக்கு குறைவான 746 ஹெக்டெயர் அமைந்துள்ள தேயிலை பயிர்ச்செய்கையிலிருந்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 79,618,323 பெறுமதியான 127,368 கிலோகிராம் தேயிலைக் கொழுந்துகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் உரிய தேயிலைக் காணிகளிலிருந்து தேயிலை விளைச்சலை பிடுங்குதல் மீளாய்வாண்டின் போது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(எ) சபையினால் மீளாய்வாண்டின் போது பராமரிக்கப்பட்ட 2936 ஹெக்டெயர் முதிர்ச்சியடைந்த தேயிலைக் காணிகளை ஒரு ஹெக்டெயருக்கு பெற்றுக் கொள்ளப்படுகின்ற வருடாந்த பூர்த்தியான தேயிலை விளைச்சலின் பிரகாரம் 1000 கிலோகிராமிற்கு மேற்பட்டவை ''A'' காணிகளாகவும் 1000 கிலோ கிராமிற்கு குறைந்த 500 கிலோகிராமிற்கு மேற்பட்ட காணிகள் ''B'' ஆகவும் 300 கிலோ கிராம்களுக்கு மேற்பட்ட 500 கிலோ கிராம்களுக்கு குறைந்த காணிகள் ''C1'' ஆகவும் வகைப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க சபைக்குச் சொந்தமான 15 தோட்டங்களில் அதன் வகைப்படுத்தலின் பிரகாரம் பயிர் செய்கைக் காணிகளின் செயலாற்றல் பின்வருமாறாகும்.

(i) வகைப்படுத்தலின் பிரகாரம் (A) வகையான ஒரு ஹெக்டயர் முதிர்ச்சியடைந்த தேயிலைக் காணியின் மூலம் பூர்த்தியான தேயிலை உற்பத்தி 1000 கிலோ கிராமிற்கு மேற்பட வேண்டிய போதிலும் சபை நிர்வகிக்கின்ற 13 தோட்டங்களில் அப் பெறுமதி 333 கிலோகிராமிற்கும் 901 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதன் காரணமாக உரிய காணி வகைப்படுத்தலின் ஆகக் குறைந்த விளைச்சலையேனும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) சபையின் காணி வகைப்படுத்தலின் பிரகாரம் (B) வகையான ஒரு ஹெக்டெயர் முதிர்ச்சியடைந்த தேயிலைக் காணியின் மூலம் கிலோ கிராம் 500 இற்கும் 999 இற்கும் இடைப்பட்ட அளவிலான பூர்த்தியான தேயிலை காணப்பட வேண்டிய போதிலும் 10 தோட்டங்களில் அப் பெறுமதி கிலோகிராம் 296 இற்கும் 466 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. அதற்கிணங்க ஆகக் குறைந்த விளைச்சலையேனும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(iii) C1 காணி வகைப்படுத்தலின் கீழ் காணப்பட்ட ஒரு ஹெக்டெயர் முதிர்ச்சியடைந்த தேயிலைக் காணியிலிருந்து ஆகக் குறைந்தது 300 கிலோகிராம் முதிர்ச்சியடைந்த தேயிலை அல்லது அதற்கு மேற்பட்ட அளவினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சபையின் 07 தோட்டங்களில் அப்பெறுமதி 146 கிலோகிராமிற்கும் 266 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(iv) சபையின் காணி வகைப்படுத்தலின் பிரகாரம் ஆகக் குறைந்த விளைச்சலையேனும் பெற்றுக்கொள்ள முடியாத நூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த தோட்டங்கள் காணப்பட்டமை. இரசாயன பசளை மற்றும் கிருமி நாசினி பயன்படுத்தாமை என்பன காரணமாக இருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற 15 தேயிலைத் தோட்டங்களில் 14 தேயிலைத் தேயிலைத் தோட்டங்களில் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அத்துமீறிக் குடியிருப்பாளர்கள் 893 நபர்களால் 861 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தும் உரிய காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உடன்படிக்கை செய்த காலம் முடிவடைந்த 18 காணிகள் தொடர்பாக புதிய உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பழைய குத்தகைதரரர்களால் குத்தகைப் பணத்தை செலுத்தாது உரிய காணிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

(இ) சபையினால் ஒரு கம்பனிக்கு 2016 ஆண்டின் போது ஹந்தான தோட்டத்தில் 113,318 கிலோ கிராம் தேயிலை கொழுந்துகள் ரூபா 5,865,670 இற்கு விற்கப்பட்டிருந்ததுடன் அச்சந்தர்ப்பம் வரை தேயிலை கொழுந்துகளை கொள்வனவு செய்து வந்த தனியார் கம்பனி கொழுந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பாக ரூபா 7,328,456 பணம் அரசாங்க கம்பனியாகிய எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய இருந்தது. அதற்கிணங்க கொள்வனவாளர் தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்ததன் காரணமாக ரூபா 5,865,670 பணத்தை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

(ஈ) சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது இலங்கை கடற்படை முகாமிற்கு தேயிலையை வழங்குவதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 80,151,700 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்காக கேள்விகளைப் பொறுப்பேற்கும் கடைசி நேரத்திற்கு முன்னர் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு சபைக்கு முடியாதிருந்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டிற்காக தேயிலையை வழங்கும் கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்கான கேட்பு மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.3 விளைவற்ற சொத்துக்கள்

ஹந்தானை உடுவெல தோட்டத்தின் தேயிலைத் தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகளை 2016 யூன் 04 ஆந் திகதியிலிருந்து நிறுத்தியதன் காரணமாக அத்தொழிற்சாலையில் காணப்பட்ட ரூபா 18,898,835 பெறுமதியான இயந்திரமும் ஏனைய சொத்துக்களும் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

### 3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

மண் சரிவு ஆபத்து காணப்படுவதாகக் குறிப்பிட்டு ஹந்தானை தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 2016 மே 04 ஆந் திகதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும் சபையினால் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து அல்லது புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு மீண்டும் தொழிற்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு பணிப்பாளர்கள் சபை தீர்மானித்திருந்தது. அக்கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளாதிருந்த போதிலும் 2017 யூலை 31 ஆந் திகதி உரிய கம்பனியால் ரூபா 6,000,000 பணம் சபைக்குச் சொந்தமான வங்கி கணக்கிற்கு நேரடியாகச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அப் பணம் வைப்புச் செய்யப்பட்டமை வைப்புச் செய்தவரால் சபைக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலை 03 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது வைப்புச் செய்தவர் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தமை பற்றி சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளரால் 2018 யூலை 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அங்கீகரித்த பதவியணியின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டு பதவிப் பெயர்களின் கீழ் 35 வெற்றிடங்களும் இரண்டு பதவிப் பெயர்களின் கீழ் 48 மிகைகளும் காணப்பட்டன.

(ஆ) முகாமையாளர் - வனம் மற்றும் பிரதி முகாமையாளர் ஆகிய இரண்டு பதவிகளையும் உள்ளடக்கி அங்கீகரித்த பதவியணிக்குள் இல்லாத 10 பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் ரூபா 3,937,772 கூட்டு மொத்தமாக இருந்தது.

(இ) பிரதி முகாமையாளர் பதவிக்கு 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் உரிய ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்னர் சபையின் தலவரால் 2018 மார்ச் 30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நன்னடத்தை காலமும் இல்லாது பொது முகாமையாளர் பதவிக்காக நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) சபையினால் முகாமையாளர் - மனித வளங்கள், முகாமையாளர் - சட்டம், உதவி சட்ட உத்தியோகத்தர் (ஒப்பந்தம்) ஆகிய பதவிகளுக்காக 03 உத்தியோகத்தர்கள் 2017 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்டிருந்தார்கள். உரிய பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட MM 1-1 சம்பள தொகுதியின் சம்பள படி நிலையில் அமர்த்துவதற்கு பதிலாக HM 1-1 சம்பள தொகுதியின் 10 ஆவது சம்பள படிநிலையில் அமர்த்தி சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) உதவி வன உத்தியோகத்தராக சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தர் 2016 திசெம்பர் 02 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2017 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் முகாமையாளர் - வனம் பதவிக்காக நியமிக்கப்பட்டு MM 1-1 சம்பளத் தொகுதியின் 10 ஆவது படி நிலையில் அமர்த்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் அச் சம்பளத் தொகுதியில் ஒரு உத்தியோகத்தர்களுக்கு தகமையற்ற 04 ஊழியர் படிகளும் ஹந்தானை தோட்டத்தில் அமைந்துள்ள தோட்ட பங்களாவும் இந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் இல்லாத இப் பதவிக்காக ஊழியர் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,144,456 செலவினை சபை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

மூன்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுவதுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் 07 பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் தலைமை அலுவலகத்தின் ஒரு பிரிவில் மாத்திரம் உள்ளக கணக்காய்வு இடம் பெற்றிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுபாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு அம்சங்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | மூல ஆவணங்களைப் பேணுதல் | காணிப்பிரிவின் குத்தகைப் பட்டியலை நாளது வரையாகப் பேணுதல் மற்றும் உரிய காலத்தில் கணக்குகள் சட்டப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படாமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் கீழ் மட்டத்தில் காணப்படுதல். |
| (இ) | ஆளணி முகாமைத்துவம் | அங்கீகரித்த ஆளணிக்கு மேலதிகமாக ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல், சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு முரணாக பதவியுயர்வுகள் மற்றும் சேவை நீடிப்புக்கள் இடம் பெற்றுள்ளமை மற்றும் ஊழியர்களுக்கு முறையாக பொறுப்புக்களையும் கடமைகளையும் ஒப்படைத்தல் இடம் பெற்றிருக்காமை. |